# Vedachandur- Village Assisstant

**PUBLISH DATE** : 18/04/2022

செ.வெ.எண்:- 46/2022

நாள்:11.04.2022

திண்டுக்கல் மாவட்டம்

வேடசந்தூர் வட்டத்தில் காலியாக உள்ள 7 கிராம உதவியாளர்கள் பணியிடங்களுக்கு தகுதியுள்ள நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் வட்டத்தில் காலியாகவுள்ள 7 கிராம உதவியாளர் பணியிடங்களுக்கு பின்வரும் கல்வித்திகுதி, இருப்பிடசான்று, வயது, சாதிசான்று, வேலைவாய்ப்பு அலுவலக அட்டை, ஓட்டுநர் உரிமம் உள்ளிட்ட தகுதியான ஆவணங்களின் நகல்களுடன் பத்திரிக்கை செய்தி வெளியான நாளில் இருந்து 15 நாட்களுக்குள் விண்ணப்பிக்கலாம். மேலும் ஏற்கனவே 2020-ஆம் ஆண்டு 5 கிராம உதவியாளர் காலிப்பணியிடத்திற்கு வெளியான விளம்பர அறிவிக்கை ரத்து செய்யப்படுகிறது.

விண்ணப்பிக்க தகுதிகள்

1. 5ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

2. குறைந்தபட்ச வயது வரம்பு 21, அதிகபட்ச வயது வரம்பு 37 ஆண்டுகள்

3. வேடசந்தூர் வட்டத்தில், பணியிடம் காலியாக உள்ள கிராமத்தை சொந்த ஊராக கொண்டவர் அல்லது காலிப்பணியிட கிராமத்திலிருந்து 2 கி.மீ., சுற்றளவில் அருகிலுள்ள கிராமத்தைச் சார்ந்தவராக இருத்தல் வேண்டும். தகுதியான நபர் கிடைக்காதபட்சத்தில் காலிப்பணியிடம் அமைந்துள்ள குறுவட்டத்தைச் சேர்ந்தவரது விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்படும்.

4. வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து மேற்படி பதிவானது நாளது தேதி வரை புதுப்பித்திருக்க வேண்டும்.

5. மிதிவண்டி ஓட்டத் தெரிந்தவராக இருக்க வேண்டும்.

காலிபணியிடம் உள்ள கிராமங்களின் விபரங்கள்

| வ. எண் | கிராமத்தின் பெயர் | இட ஒதுக்கீடுவிபரம் | ஆண்/பெண்/ இருபாலர் |
|---|---|---|---|
| 1 | குட்டம் | பி.வ(முஸ்லீம் அல்லாதவர்)(முன்னுரிமையற்றவர்)BC(Other than Muslims) Non Priority – Womens | பெண்கள் |
| 2 | வேல்வார்கோட்டை | பொதுப்பிரிவு(முன்னுரிமையற்றவர்)GT-Non Priority- Reservation EX servicemen-General (Tamil Medium) | பொது(முன்னாள் இராணுவத்தினர்) |
| 3 | தென்னம்பட்டி | எஸ்.ஸி(அருந்ததியினர்)(முன்னுரிமையற்றவர்)SC (Arunthathiyinar) – Non priority – Both men & Women | பொது |
| 4 | இராமநாதபுரம் | மி.பி.வ / சீ.ம(முன்னுரிமையற்றவர்)MBC/Denotified | பொது |

| | | | |
|---|---|---|---|
| | | communities- Non Priority – Both men & Women | |
| 5 | ஏ.கோம்பை | பி.வ(முஸ்லீம்அல்லாதவர்) (முன்னுரிமையற்றவர்)BC(Other than Muslims) Non Priority – Both men & Women | பொது |
| 6 | பூதிப்புரம் | பொதுப்பிரிவு (முன்னுரிமை)GT-Priority- Both men & Women | பொது |
| 7 | மோர்ப்பட்டி | எஸ்ஸி (முன்னுரிமை)SC-Priority- Both men & Women | பொது |

தகுதியுடைய நபர்கள் விண்ணப்பங்களை வேடசந்தூர் வட்டாட்சியரிடம் சமர்ப்பிக்க வேண்டும் என வேடசந்தூர் வட்டாட்சியர் திருமதி செ.மணிமொழி தெரிவித்துள்ளார்.

செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திண்டுக்கல்.